# குகஸ்ரீ சண்முகதாஸ்
# மாப்பாண முதலியார்

University of Jaffna
230.92
ARU
250350(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

230.92
CAN

UNIVERSITY OF JAFFNA LIBRARY

University of Jaffna
250350
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகா

# அமரருக்கு நமது அஞ்சலி



நல்லைக் காவலர்

அமரர்

## குகஸ்ரீ சண்முகதாஸ் மாப்பாண முதலியார்

அவர்கள்

230.92 ARU AR

★

ஜெனனம் : 26-2-1922

சாயுச்சியம் : 15-12-1964



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அந்தநாள் இனிவருமோ?





நல்லூர்க் கந்தஸ்வாமி கோவில் அறக் காவலர் குகஸ்ரீ இ. ஷண்முகதாஸ மாப்பாண முதலியார் அவர்கள் குரோதி ஆண்டு மார்கழித்திங்கள் திருவெம்பாவையும், ஸ்வர்க்க வாயில் ஏகாதசியும் கூடிய புண்ணிய தினத்தில் அமரர் ஆனார்கள்.

ARCHIVE



ஈழத்திருநாட்டில் நல்லையம்பதி மற்ற ஆலயங்களுக்கு ஒரு வழிகாட்டி; அதன் சிறப்பிற் கேற்ப அறக்காவலராயிருந்து, அருந் தொண்டாற்றி அறுமுகன் திருவடிகளை அடைந்து அமரரானார். குகஸ்ரீ ஷண்முகதாஸ மாப்பாண முதலியார் அவர்கள்: அறிவு, ஒழுக்கம், சீலம், பக்தி, கண்டிப்பு, ஆகிய குணங்கள் ஒருங்கே அமையப் பெற்றவர். அவரது நிர்வாகத்தில் ஆலயம் மக்கள் வியக்கத்தக்க வகையில் முன்னேறி வந்தது.

250350 250350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னொளிர் மேனியும், வெண்ணீறு திரிபுரண்டாமாகத் தரித்தகோல மும் புன்முறுவல் பூத்த முகமும், ருத்திராக்ஷம் அணிந்த கழுத்தும், சாந்த மானஉருவமும் கொண்ட குகஸ்ரீ ஷண்முகதாஸரை மீண்டும் காணும் **அந்தநாள் இனிவருமோ?**

மயிர்வினை முடித்த தலையில் சிரோமாலையும், மஞ்சள் பட்டாடை அரையில் பொலிய, மகர கண்டிகை கழுத்தில் துலங்க, சங்கல்பம் ஏற்று, அந்தணர்கட்குத் தானம் வழங்கி, முன்னே மகரதோரணம் செல்ல, அதன் முன் ஆட்டக்காவடி பம்பையுடன் செல்ல, சங்கநாதம் முழங்க, நாகசுரம் தவிலும் ஆர்ப்ப, அதன் பின் தேவாரக் கோஷ்டியினர் பண் இசைக்க, வேதியர்கள் மங்களப் பொருட்களுடன் புடைசூழ, செல்வத் திருமகள் பாற்குடம் ஏந்தித் தொடர பக்தியே உருவாய், பண்பே வடிவாய் கந்தன் ஆலயத்திற்குக் காவலர் காவடி தாங்கிச் செல்லும் கவின்மிகு காட்சி காணும் **அந்தநாள் இனிவருமோ?**

அறுமுகப் பெருமான் ஆரோகணித்த அற்புத ரதத்தில் பீதாம்பரம் தரித்து, சிவக்கோலம் கொண்டு மக்கள் வைத்தகண் வாங்காது பரவச மாய்ப்பார்க்க சங்கற்பம் முடித்து முருகனின் தத்ரூப தோற்றம் போல் காட்சியளிக்கும் **அந்தநாள் இனிவருமோ?**

பஞ்சமூர்த்திகளுடன் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் திரண்டிருக்க முருகநாம கோஷம் வானைப் பிளக்க, ஷண்முக தீர்த்த மண்டபத்திலே அரோஹரா என்ற ஆயிரக்கணக்கான மக்கள் கோஷத்தின் எதிரொலி யுடன், தீர்த்தமாடும் திருக்கோலம் காணும் **அந்தநாள் இனிவருமோ?**

அறத்தின் காவலனாயிருந்தாலும் ஆண்டவனின் அருள் தொண்டன் என்பதை அனைவருக்கும் செயல் மூலம் உணர்த்த, பள்ளியறையேகும், பார்வதி மைந்தனுக்கு, பக்தியுடன் தீவர்த்தியேந்தி வழிகாட்டிய **அந்தநாள் இனிவருமோ?**

நாதபிந்த கலாதீ நமோநம என்று இசையின் பயனை உணர்ந்து வித்வத்சபையின் விழாவினை, வீதியிலே திருவிளக்கேற்றித் திறந்து வைக் கும் **அந்தநாள் இனிவருமோ?**

எண்ணிய எண்ணம் யாவும் முருகன் செயலென எண்ணி வாழ்ந் தவர் அமரர் குகஸ்ரீ ஷண்முகதாஸர். சன்னிதானத்தில் செந்தமிழ் இன்னி சையுடன் முழங்க வழிகாட்டினர். ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீயே என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார் வாக்குப் பிரகாரம் அற்புதமாக திருவெம்பாவை திருப்பள்ளி, எழுச்சி, பக்திப்பாடல்கள், ஆகியவற்றை அவ்வப்போது ஒலிபெருக்கி மக்களை சிவசிந்தனையில் ஈடுபடுத்தினர். சிறியேனைத் தேவஸ்தான வித்வானாக்கி, ஊக்கமும், ஆக்கமும் தந்து சீரும் சிறப்பும் செய்த செம்மலை என் உளமாரப் போற்றுகின்றேன்.

"அருளமுதத்" தின் தந்தை அவர்கள். தனது அறத்தந்தையை குறுகிய காலத்தில் இழந்த "அருளமுதம்" ஆகிய அருட் செல்வி, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றாள்,

வைகுண்ட ஏகாதசியன்று இவர்கள் அமரரானது இவர்களது தவத்தின் வலிமைக்கு ஒரு எடுததுக்காட்டு.

வெண்பா

சீராச் சுரோதிசேர் மார்கழி யொன்று செவ்வாய்
ஏரார் வைகுண்டத்தே காதசியில் = நேரான
நல்லூர் எஜமானும் சண்முகதாஸன் பேற்றன்
எல்லையில் பேரின்பம் இனிது

அவரது வழிநின்று கந்தன் ஆலய அறக்காவல் பூண்டு' அருந்தொண்டாற்ற அண்ணரது ஆருயிர்ச் சகோதரன் குகஸ்ரீ குமாரதாஸ் அவர்களுக்கு எல்லா நலன்களும் எய்த எல்லாம் வல்ல நல்லைக் கந்தன் திருவடிகளைப் பிராத்திக்கின்றேன்.

சீரொழுகு நல்லூர்க் கந்தரா லயம்வளர்
சிறப்பினை நினைந்தழுவமோ
சிந்தனையி லெந்தநா ளுஞ்சிவத் தின்நினைவுச்
செம்மையை நினைந்தழுவமோ
நேரொழுகு நெறிதனில் நித்யபூஜை விழா
நிர்வாகம் நினைந்தழுவமோ
நீறுருத் திராக்கதம் நீள்ஜெயம் மலரநி
ன்றதை நினைந்தழுவமோ
ஏரொழுகு பொன்மணித் தேர்திங்கள் பத்தினில்
ஈந்ததை நினைந்தழுவமோ
ஏறுமயில் ஏறிவிளை யாடுசண் முகனையங்
கிருத்தியயதை நினைந்தழுவமோ
பேரொழுகு மிந்தியப் பண்புதனி லாலயம்
பேணியதை நினைந்தழுவமோ
பெருமை சேர் நினதுபுகழ் எதைநினைந்தழுவம்
பீடுயர்சண் முகதர்சனே !

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயமும் பெண்களும்

செல்வி : நல்லபிள்ளை நாகமுத்து
(ஆசிரியை மங்கயர்க்கரசி வித்தியாசாலை, நல்லூர்)

பரந்துவிரிந்த பாருலகின் கண்ணே பற்பல சமயங்கள் நிலவி வருவதைப் பார்க்கின்றோம், கேட்கின்றோம். அவற்றின் மத்தியிலே தன்மணம் குன்றாது தளிர்விட்டுத் தழைத்துக்கொண்டிருக்கிறது எங்கள் சைவசமயம்.

ஏனைய மதங்களை நோக்குமிடத்து அது யாரால், எப்போ, எங்கே ஆரம்பமாயது என்பதை நாம் திட்டமாக அறியக்கூடியதாக இருக்கிறது. ஆனால் இந்து சமயமோ, அதன் மதஸ்தாபகர் யார்? எங்கே? எப்போ? ஆரம்பமாயது என்றால் திட்டமாகக் கூறமுடியாத நிலையில் இருக்கின்றது. இந்த ஒன்றே இதன் தொன்மையையும், பெருமையையும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் எடுத்துக்காட்டுகிறது. அதுமட்டுமா ...?

''சைவத்தின் மேற்சமயம் வேறில்லை அதிற்
சார்சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வமில்''

என்ற செய்யுளில் "சைவத்தின்மேல் சமயம் வேறில்லை" என்ற கூற்றும் அதையே உறுதிப்படுத்துகின்றது.

காலத்திற்குக்காலம் காவலராலும் பாவலராலும் கருதி வளர்க்கப்பட்ட இச்சமயமானது காலவெள்ளத்தாற்கூடக் கரைத்து அழித்து விடமுடியாத நிலையில் காலங்கடந்து நிற்கும் பழம் பெருமைபடைத்து விளங்குகிறது.

அன்று தோன்றிய சைவசமயம் இன்றும் எங்கள் மத்தியிலே வாழ்ந்து கொண்டிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் எமக்குமுன் தோன்றிய சமய குரவர்கள், சமயப்பெரியார்கள், சைவ நன்மக்களுமேயாகும் காலத்திற்குக் காலம் தோன்றிய அவர்கள் கடவுளின் திருவருளைப்பெற்று, செயற்கருஞ் செயல்கள் பலவற்றைச்செய்து சற்சமயமாகிய சைவசமயத்தின் பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யை நிலைநாட்டிச் சென்றுள்ளனர். தமக்கென வாழாப் பெருந்தகையாள ரான அவர்கள் தேடிவைத்த சொத்துக்கள் பல இன்றும் எங்கள் மத்தியிலே வாழ்ந்துகொண்டிருக்கின்றன. அவற்றைப் பாதுகாத்து பயன்படுத்தி அவர்கள் காட்டிய் அன்புவழியிலே நின்று, அரும்பெரும் சமயமாகிய சைவ சமயத்தை வளர்க்க வேண்டியது இன்றைய மக்களின் தலையாய கடனாகும்.

சமய வளர்ச்சி கருதிய சான்றோர்கள் ஆங்காங்கு சங்கங்களை ஸ்தாபித்தும், சமயப் பிரசங்கங்களை நிகழ்வித்தும், சமய சஞ்சிகைகளை நடாத்தியும் வருவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். எனினும் சமயவளர்ச்சியில் தங்கள் பணி என்ன ? என்பதை மக்கள் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

ஆடவர்களுக்கு மட்டுமல்ல , அரிவையர்க்குங்கூட அதில் பெரும்பங்கு உண்டு என்பதை அவர்கள் அறிய வேண்டும். இன்றைய உலகிலே சமய வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாக ஈடுபடவேண்டியவர்கள் காரிகையர் தாம் என்றால் அது மிகையாகாது ஏனென்றால் ஆண்கள் தமது நேரத்தில் அதிகமான பகுதியை அலுவலகங்களிலும், வெளிவேலைகளிலும் செலவழிக்கின்றார்கள். ஆனல் பெண்களோ பெரும்பகுதியான நேரத்தைக் குடும்ப நிர்வாகத்திலேயே செலவழிக்கின்றார்கள். அதுமட்டுமல்ல.

இல்லத்திற்குத்தலைவி இல்லாள் தானே. அந்த இல்லாளிடம் சமயப் பற்று இன்றேல் அந்த இல்லத்தில் சமய வாழ்வை எதிர்பார்க்க முடியுமா? அது மட்டுமல்ல ஒரு குடும்பத்திலே ஒரு பெண்ணானவள் எந்த நிலையிலே வாழ்கின்றாள். தாயாக—சேயாக—அன்புச் சகோதரியாக, அறம் வளர்க்கும் மனைவியாகவே வாழ்கின்றாள். எதிர்கால சமுதாயத்தையே இறைவன் இவர்கள் கையிலல்லவா ஒப்படைத்திருக்கிறார்.

தங்கள் குழந்தைகளின் உடல் வளர்ச்சியிலும் ஏட்டுப்படிப்பிலும் மட்டும் தான் இன்றைய பெற்றோர்கள் கவனமெடுப்பதைக் காண்கின்றோம். ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாதல்லவா!

ஒழுக்கம் என்ற நிலை மிகமிகக் குறைந்து வருகின்ற இந் நேரத்திலே தங்கள் குழந்தைகளிடம் ஒழுக்கத்தை வளர்ப்பது தாய்மார்களின் கடமையல்லவா? ஒழுக்கமுடையார் உலகில் உயர்ந்தோராய் மதிக்கப்படுதலை எவரும் அறிவர். இதையே தான் வாழ விரும்பும் மக்களுக்கு வழிகாட்டியாக் விளங்கும் வள்ளுவர் கூட

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே உயிரினும் மேலான நல்லொழுக்கம் தங்கள் குழந்தைகளிடம் வளர வேண்டுமானால் அவர்களுக்கு சமய அறிவு மிக மிக அவசியம் என்பதைத் தாய்மார்கள் உணரவேண்டும். அதுவும்

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"

என்பதை அனைத்து இளமையிலேயே புகட்டப்பட வேண்டும்.

"தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டுமல்லவா? சமயப் பழக்க வழக்கங்களும் சன்மார்க்க நெறிகளும் சிறு வயதிலிருந்து சிறுவர்களுடன் சேர்ந்து வளர வேண்டும். சமயம் வேறு வாழ்க்கை வேறுஎன்ற நிலைமாறி சமயமும் வாழ்க்கையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து வளர வேண்டும். இவற்றையெல்லாம் தங்கள் கடமையென உணர்ந்து தாய்மார்கள் பணிபுரிவார்களேயானால் அவர்கள் வாழ்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் சமய வளர்ச்சி ஏற்படும். ஒவ்வொரு வீட்டிலும் சமயம் வளருமானால் அந்த நாட்டிலே சமயம் வாழும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இன்று மட்டுமல்ல அன்றிலிருந்தே அரிவையர் பலர் சமயப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பதைச் சரித்திரங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. நம் சைவர்களின் அரும் பெரும் பொக்கிஷமான புராணங்களைப் புரட்டிப் பார்ப்போமானால் இவ் வழியிலே நின்று பணிபுரிந்த பாவையர் பலரை நாம் சந்திக்க முடிகிறது.

பிறவிப்பிணியிலே தத்தளித்துத் தடுமாறுகிற மக்களுக்கெல்லாம் பேரின்ப வாழ்விற்கு வழிகாட்டுகின்றன நாவுக்கரசரின் பதிகங்கள். திருவாரூரிலே வாழ்ந்த திலகவதியார் இன்றேல் நாவுக்கரசரையும் நாவுக்கினிய பதிகங்களையும் நாம் பெற்றிருக்க முடியுமா?

பரசமயப் படுகுழியிலே மூழ்கியிருந்த பாண்டி நாட்டிலே மீண்டும் சைவம் தழைத்தது என்றால் அது மங்கையற்கரசியாரால் தான் என்பதை எவருமே மறுக்க முடியாது. அவரது சமயப் பற்றானது அவரை மட்டுமல்ல, அவரது கணவரை மட்டுமல்ல, அந்த நாட்டையே, நாட்டு மக்களையே பாவத்தினின்றும் பாதுகாத்து நல்வழிப் படுத்தியதென்பதை அறியலாம். அவரது சிறந்த சமய வாழ்வினாலன்றோ இறைவனையே பாடிக்கொண்டிருந்த ஞானசம்பந்தர் கூட அவரது பெயரைத் தமது பதிகத்தில் குறிப்பிட்டு

"மங்கையர்க்கரசி வளவர் கோன்பாவை வரிவளைக்கை மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி"

எனப்பாடிப் பெருமைப் படுத்தியுள்ளார் என்பதைச் சைவ உலகம் நன்கு அறியும். அவரது மன உறுதி, மாபெரும் பணி, இன்றைய மக்களுக்கு ஓர் சிறந்த வழிகாட்டியாக இருக்கின்றன. இன்னும் இல்லற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விலே ஈடுபட்டிருந்த புனிதவதியாரைப் பாருங்கள்! கணவனுக்கு உணவு பரிமாறிக்கொண்டிருந்த அவர் கனியைக் கொண்டுவா, எனக் கணவன் பணித்ததும் அந்த நேரத்திலேயே அந்த வீட்டிலேயே அதி மதுரமாகிய இரு மாங்கனிகளை இறைவனிடமே வேண்டிப் பெற்றுள்ளாரென்றால் அவரது இறையன்பு, கடவுள் பக்தி எத்தனை சிறந்தது என்பதைச் சிந்திக்க வேண்டும். எவரொருவருமே விரும்பாத பேய் வடிவத்தையும் விரும்பிப் பெற்ற அவர் திருக்கைலாயத்திலே இறைவனின் திருக்கோலக் காட்சியைக் காண, தலையால் நடந்து சென்றாரென்றால் அவரின் தவவலிமை எத்தகையது? அவரது செயற்கரும் செயலைக் கண்டு அகில உலகிற்கும் மாதாவாகிய உமாதேவியார் கூட ஆச்சரியப் பட்டாரென்றால் அவர் தம் பெருமையை வரையறுத்துக் கூறமுடியுமா? தாயுந் தந்தையுமற்று, எல்லாந் தானேயாய் விளங்குகின்ற தயாநிதியினால் கூட "அம்மையே" என அழைக்கின்ற அரும் பெரும் பேற்றைப் பெற்றவர் காரைக்காலம்மையார்.

இந்த விதமாக எத்தனையோ தாய்மார்கள் தங்கள் சமய வாழ்வினாலே எங்கள் வரலாற்றிலே இடம் பெற்று இருக்கிறார்கள். அவர்களின் சமய வாழ்வை அறிந்து அதன் வழி நின்று இறைவனின் திருவடி நிழலாகிய பேரின்பப் பெருவாழ்வையடைய முயல வேண்டும். அது மட்டுமன்றி நாட்டிற்கு நல்லதோர் சமுதாயத்தை ஆக்கி அழிக்கும் பெரும் பொறுப்பு நங்கையர் கையிற்றான் உண்டு !என்பதை உணர்ந்து, அவ் வழியிலே நின்று அரும் பெருஞ் .சமயமாகிய சைவ சமயத்தை வளர்க்க முயல்வார்களாக!

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக
உலக மெல்லாம்"

திருக்குறள் தந்த தமிழினத்தின்
தித்திக்கும் திருநா ளாமின்று
அருளமுத மனைவ ரையும்
அகமகிழ்ந் தன்பாய் வாழ்த்திடுதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மகோத்சவம்



புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலுள்ள இந்தியாவிலும் இலங்கையிலும் ஆங்காங்குள்ள சைவஆலயங்களில் வருடந்தோறும் நடைபெற்றுவருகின்ற மகோத்சவங்களைப் பெரும் பாலான சைவமக்கள் சென்று தரிசித்து மகிழ்வுற்று வருகின்றனர். அங்ஙனமாயினும், உத்சவங்கள் ஆலயவருமானத்திற்காகச் செய்யப்படுவனவென்றும்,வினோதமாகிய கொண்டாட்டத்துக்குரியன வென்றும், அறிந்துகொண்டுள்ளவரன்றி, அவ்வுத்சவங்களின் அரிய பெரிய பயன்களையும் உண்மைகளையும் உள்ளவாறுணர்ந்து பயன் பெறுவோர் மிகச்சிலரினுஞ்சிலரேயாவர்.

பெரும்பாலானோர் அவற்றின் பயன்களையும், உண்மைகளையும், நோக்கங்களையும் உணராமையால், உத்சவத்துக்கு அங்கமாகிய நிருத்த கீதங்களுக்கும் மற்றும் விநோதங்களுக்கும் பெரும் பொருட்செலவு செய்தும் அவற்றிற்கு அதிக நேரம் கொடுத்தும் நடத்துவதால் பகல் உத்சவம் அன்று இரவிலும், இரவு உத்சவம் அடுத்தநாட்காலையிலும் நிகழ வேண்டியனவாகின்றன. அதனால் உத்சவ தரிசனத்திற்கு வருவோர் ஆலயத்தில் அதிகநேரம் தங்க வேண்டியிருப்பதால், பசி, தாகம், நித்திரை, மலசல உபாதிகளால் தாக்குண்டு, ஆலயத்தில் செய்யக்கூடாத அநுசிதமான காரியங்களைச் செய்யவேண்டியவராகின்றனர். இது குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொண்டவாறு போலாகின்றது. ஆதலால் அவ்வுத்சவ விஷயமான பயன்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகளும் நோக்கங்களும் ஒரு சிறிது இதில் வெளியிடப்படுகின்றது.

## உத்சவ வரலாறு

முன்னொருகற்ப காலத்தில் நிகழ்ந்த கலியுக இறுதியில் வாழ்ந்திருந்த பிரமபுத்திரனாகிய தக்கனென்பவன் சிவபெருமானை இகழ்ந்து நீக்கி, ஒரு யாகம் செய்தனன். தக்கனுக்குப் பயந்து, அந்த யாகத்தில் சென்று அவிப்பாகம் பெற்று உண்ட இந்திரன் முதலிய தேவர்கள் இறைவராலே தண்டிக்கப்பட்டு, யாகாதிகருமங்களையும் இழந்தனராயினும், தொலையாது எஞ்சி நின்ற பாவத்தால் அவ்விறைவரிடத்து வரப்பிரசாதம் பெற்ற அவுணர், இராக்கதர் முதலியோரால் தாக்குண்டு பலகாலம் வருந்தினர். வருந்திய அவர்கள் அப்பாவத்தினின்றும் நீங்கவும் தம்மை வருத்திய அவுணர் முதலியோரை வெல்லவும், விரும்பி அவ்விறைவரின் அருள் வசத்தால் சிவ மகாயாகமாகிய மகோத்சவத்தைத் தொடங்கி நடத்தினர். அந்த மகோத்சவப் பயனால் தமது பாவம் முழுவதும் நீங்கி, தமது பழைய உயர்ந்த நிலையினைப்பெற்று, தமது பகைவரையும் வென்றனர். தேவர்களால் தொடங்கப்பெற்ற மகோத்சவமானது சைவாகமங்களின் விதிப்படி சைவ உலகில் நடைபெற்றுவருவதாயிற்று. இறைவருக்கு தொடங்கப்பெற்ற மகோத்சவம் அவருடைய அருள் வழிவந்த மூர்த்திகளாகிய உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியர், வீரபத்திரர், வைரவர் முதலியோர்களுக்கும் நடைபெறுவதாயிற்று. அங்ஙனம் நடைபெற்றாலும் அதில் மூர்த்திபேதமேயன்றி உத்சவபேதம் இன்றாகும்.

## உத்சவக் கருத்து

மகோத்சவமென்பது: பெரிய மேலாகிய மூர்த்தியை எழுந்தருளச் செய்யும் திருவிழாவாகிய யாகம் எனப் பொருள்விரித்துரைக்கப்படும். அது ஆன்மாக்களின் பாசங்களை நீக்கி முத்தியை கொடுக்கும் பஞ்ச கிருத்தியங்களைக் குறிப்பதெனச் சைவாகமங்களில் கூறப்படுகின்றது. அன்றியும், சிவதீக்ஷையும் ஆன்மாக்களின் பாசங்களை நீக்கி முத்திகொடுப்பதாதலால், மகோத்சவமும் அத் தீக்ஷை வகைகளுள் ஒன்றாகிய சாம்பவிதீக்ஷையாகுமெனவும், சைவாகமங்களில் விதந்தெடுத்துக் கூறப்படும் மெய்ப்பொருளையும் குறிப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்சவ நோக்கம்

திருக்கோயில்களில் நாள்தோறும் "செய்யப்படும் பூசை முதலியவைகளில் உளவாகும் குறைகள் நீங்கும் பொருட்டும் தீக்ஷிதர் அதீக்ஷிதர் சமயாசாரலோபிகள் சார்த்தர் முதலியோரதும் மிருகம் பக்ஷிதாவரமாகிய உயிர்களினதும் நன்மையின் பொருட்டுமே மகோத்சவம் செய்யப்படுவதாகும். ,நித்திய பூசையின் முடிவில் செய்யப்படும் நித்திய உற்சவமும், சைவ நன்மக்களால் தமது இஷ்ட சித்தியின் பொருட்டு வேண்டும் போது செய்விக்கப்படும் காமிய உத்சவமும் உளவாயினும் மகோத்சவம் என்பது வருஷந்தோறும் திதி நக்ஷத்திரம் சங்கிராந்தி விஷுவம் அயனம் முதலிய புண்ணிய காலங்களில் ஒன்றைத் தீர்த்த தினமாகக்கொண்டு, அதற்குமுன் குறிக்கப்பட்ட ஒரு தினத்தில் தொடங்கி நடத்தப்படும் நைமித்திக உத்சவத்தையே குறிப்பதாகும்.

## உத்சவ பேதம்

நைமித்திக மகோத்சவம், சாகல்லியம் பாவனம் சாந்திகம் மாங்கல்லியம் என நால்வகைப்படும். இறைவருக்குரிய சகளமூர்த்திகள் இருபத்தைவரில் சோமாஸ்கந்தர், நடேசர், கஜமுகானுக்கிரகர், சுகாசீனர் என்பவருள் ஒருவரை முதல்வராகக் கொண்டு மற்றைய மூர்த்திகளையும் எழுந்தருளச் செய்வதாகிய சாகல்லியம் என்பது, கொடியேற்றம் முதலாகத் தீர்த்தம் முடிபாகச் செய்யப்படுவதாம். பாவனம் என்பது கொடியேற்றம் மட்டும் இன்றி மற்றெல்லாம் சாகல்லியம் போலப் பாவனையாற் செய்யப்படுவதாம், சாந்திகம் என்பது கொடியேற்றம் யாகம் ஓமம் பலி முதலிய ஒன்றுமின்றிச் சாந்தியுண்டாகுமாறு மாலையில் மாத்திரம் உத்சவம் செய்யப்படுவதாம். மாங்கல்லியம் என்பது மங்கலமுண்டாகுமாறு காலையில் மாத்திரம் உத்சவம் செய்யப்படுவதாம்.

இந் நால்வகை மகோத்சவங்களுள் சாகல்லிய உற்சவம் உத்சவதினங்களின் அளவினால் உத்தமத்திரயம், மத்திமத்திரயம், அதமத்திரயம் என ஒன்பது வகைப்படும். உத்தமத்திரயம் மூன்றனுள் சூரியசம்பந்தமாக இருபத்தேழுநாள் கொள்வது சௌரம் எனவும் சந்திரசம்பந்தமாகப் பதினேழு நாள் கொள்வது சாந்திரமெனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவித்திரிமந்திர சம்பந்தமாகப் பதினைந்து நாள் கொள்வது சாவித்திரமெனவும் பெயர் பெறும். இம் மூன்றும் பொதுவகையால் சௌக்கியமெனவுஞ் சொல்லப்படும்.

மத்திமத்திரயம் மூன்றனுள் குமாரப் பருவ சம்பந்தமாகப் பதின்மூன்று நாள் கொள்வது கௌமாரமெனவும், இறைவனின் ஒன்பதுவகைத் தேவசம்பந்தமாக ஒன்பது நாள் கொள்வது தைவிகமெனவும், எழுவகைப் புவன சம்பந்தமாக ஏழுநாள் கொள்வது பௌவனமெனவும் பெயர் பெறும். இம் மூன்றும் பொதுவகையால் விஜய மெனவும் சொல்லப்படும்.

அதமத்திரயம் மூன்றனுள் ஐம்பூத சம்பந்தமாக ஐந்து நாள் கொள்வது பௌதிகமெனவும். முக்குண சம்பந்தமாக மூன்றுநாள் கொள்வது கௌணம் எனவும் சிவம் ஒன்றே சம்பந்தமாக ஒருநாள் கொள்வது சைவம் எனவும் பெயர் பெறும். இம் மூன்றும் பொதுவகையால் இருத்திதம் எனவுஞ் சொல்லப்படும். இவை மூன்றும் சாகல்லிய உத்சவ வகையில் இறுதிக்கணுள்ளனவாயினும் கொடியேற்றமின்றியே செய்யப்படுவனவாம். இவைகள் காமிய உத்சவமாகக் கொள்ளத்தக்கன எனக்கருத இட முண்டு.

சாகல்லிய உதசவ வகையில் உத்தமத்திரயம் மத்தி மத்திரயம் என்னும் ஆறும் துவஜாரோகண பூர்வம் பேரீதாடன பூர்வம் அங்குரார்ப்பண பூர்வம் என்னும் மூவகைத் தொடக்கங்களுள் ஓர் வகையினுல் தொடங்கப் படும்.

துவஜாரோகண பூர்வமாவது: கொடியேற்ற தினத்துக்கு முன் ஒன்பது முதலாகக் கீழ்க்கீழுள்ள ஒற்றித்த தினங்களில் ஒரு சுபதினத்தில் துவசாங்குரமும் குறித்த தினத்தில் கொடியேற்றமும் அன்றிரவு பேரீதாடனமும் பின் உற்சவாங்குரமும் தீர்த்தாங்குரமுமாகத் தொடங் கப்படுவதாம்.

பேரீதாடன பூர்வம் என்பது:— முற்குறித்தபடி ஒற் றித்த ஒரு சுப தினத்தில் பேரியங்குரமும் கொடியேற் றத்திற்கு முன் பேரீதாடனமும் பின் கொடியேற்றமும் அன்றிரவு உத்சவாங்குரமும் தீர்த்தாங்குரமுமாகத் தொடங்கப்படுவதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குரார்ப்பண பூர்வம் என்பது:— முற்குறித்தபடி ஒற்றித்த ஒரு சுப தினத்தில் சுபாங்குரமும் கொடியேற்றத்துக்கு முன் உத்சவாங்குரமும் பின் பேரீதாடனமும் கொடியேற்றமும் அன்றிரவு தீர்த்தாங்குரமுமாகத் தொடங்கப்படுவதாம்.

அன்றியும் ஒன்பது ஏழு என்னும் தினக்கணக்கின வாய் மத்திமத்திரயங்களில் இறுதியில் உள்ள தைவிகம் பௌவனம் என்னும் இரண்டும் அங்குரார்ப்பண பூர்வமாகவும், அத்தினங்களை இருமடியாக்குமிடத்துப் பேரீதாடனபூர்வமாகவும், மும்மடியாக்குமிடத்துத் துவஜாரோகண பூர்வமாகவும் கொள்வதும் ஒருவகை முறைமையாகும்.

இன்னும் மத்திமத்திரயத்தில் நடுவிலுள்ள ஒன்பது தினக்கணக்கினையுடைய தைவிகமென்னும் உற்சவமானது ஒன்பது தினத்தில் பதினாறு காலப்பலியிடுதலையுடைய விஜயமும், பத்து தினத்தில் பதினெட்டுக் காலப்பலியிடுதலையுடைய புஷ்கலமும் என இருவகைப்படும். இந்த விஜயமும் புஷ்கலமும் முறையே சாந்திகம், சைவம் எனவும் கூறப்படும்.

பத்துத்தினத்தில்பதினெட்டுக்கால பலியிடுதலையுடையதும் அங்குரார்ப்பண பூர்வமாகத் தொடங்கப்படுவதும், புஷ்கலம் அல்லது சைவம் என்னும் பெயரினையுடையதுமாகிய மகோத்சவமே பெரும்பாலான சைவாலயங்களில் பத்துத் தின உத்சவமாக நடைபெற்று வருவதாம். ஆகம பேதத்தால் இவற்றுள் சில பேதமாகவும் கூறப்படும்.

## உத்சவக் கிரியாங்கங்கள்

இந்த மகோத்சவத்தில், முகூர்த்த நிச்சயம், யாக மண்டபப் பிரபாதி ஆரம்பம் ஆசாரிய க்ஷௌர ஸ்நான சந்தியாவந்தன தர்ப்பணாதி, அநுஞ்ஞா சங்கல்ப்பம், கணபதி பூசை, அநுஞ்ஞை, பிரார்த்தனை, கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், அதிவாசம், பூர்வசந்தானம், பச்சிம சந்தானம், ரக்ஷாபந்தனம் பேரீதாடனம், தம்பப் பிரதிஷ்டை, துவசப் பிரதிஷ்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்திரப் பிரதிஸ்டை, சமஸ்த தேவதா வாகனம், அலங்கார சூரிணிகை, கணபதி தாளம், விருஷபதாளம், தானவகை, துவஜாரோகணம், தம்பபூசை. அஸ்திர தேவதாவாகனம், மகாசீர்வாதம், பலிபீடப் பிரதிஷ்டை, சந்தியாவாகனம், அஸ்திரயாகம், யாகாரம்பம், உத்சவம் திருக்கல்யாணம், வசந்தோத்சவம் தைலாப்பியங்கம், கிருஷ்ணகந்தோத்சவம், மிருயாத்ரோத்சவம், கந்தோத்சவ சகிதரதோத்சவம், சூர்ணோத்சவம், தீர்த்தோத்சவம், மகாபூரணுகுதி, யாக கும்பாபிஷேகம், யாகோத்வாசனம், டோளோத்சவம், துவசாவரோகணம், சந்திவிசர்ச்சனம், சப்தாவரணம், மௌனோத்சவம், சண்டோத்சவம், தெப்போத்சவம், ஆசாரியோத்சவம், முதலிய பல கிரியாங்கங்கள் நடைபெறுவன வாகும்.

ஸ்ரீலஸ்ரீ சி. சுப்பிரமணிய தேசிகர்
காரைநகர்


# அருளமுத அருள் வள்ளல்கள்.

திரு. எஸ். கனகசபை அவர்கள்
(சிறுப்பர்)
ஐக்கிய இலாபநிதிச் சங்கம்
வண்ணூர்பண்ணை. யாழ்ப்பாணம்.

★

திரு. எஸ். சேனுதிராஜா
''நகை மாளிகை''
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★

திரு. கே. எஸ். பொன்னுத்துரைப்பத்தர்
அவர்கள் ''கமல வாசம்''
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பனியும் பாவையும்

"நந்தி"

பனி படர்ந்த ஒரு மாமரக் கொம்பிலிருந்து ஒரு பூங்குயில் கூவிற்று. அதைத் தொடர்ந்து கூவின பல கோழிகள். நல்லூரானின் அதி காலை மணிஓசை பவனத்தின் பனியைப் புனிதமாக்கியது.

" மாதே வளருதியோவன்செவியோ நின்செவிதான் " .....
குஞ்சுக்குரல்களின் கான கீதம் சங்கொலி, மணிஓசை இவற்றோடு கொஞ்சிக் குலவின. அக்கம் பக்கத்து வீடுகளின் யன்னல்கள் எல்லாம் திறந்தன. கந்தகோட்ட ஆச்சிரமத்திலிருந்து திருவெம்பாவை பஜனைக் குழு வந்துகொண்டிருந்தது. கர்ப்பூர வாசனை ஒளியின் பின்னணியில் பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம், ஊதா நிழல்கள்போல் பல வர்ணப் பாவாடைகளையும், சட்டைகளையும், சால்வைகளையும் அணிந்த ஐம்பது அறுபது சிறுமிகளும், சிறுவர்களும்,

" முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேத்துமப் பெற்றியனே..."

ஒரு செம்பு பனிநீரை முகத்தில் வார்த்தது போல், இந்தப் பாட்டோசை தூங்கிக் கொண்டிருந்தவர்கள் எல்லோரையுமே எழுப்பிற்று. யன்னல்களிலெல்லாம் முகங்கள்,

சிறுர்களின் முன்னால் திருவெம்பாவை தந்த மணிவாசகரின் திருஉருவச்சிலை பவனிவந்தது. மணிவாசகருக்குப் பனிபடாதவாறு பல வர்ணச் சின்னக்குடை,

" போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள் "

குதலைக் குரலோடு முதுமைப் பண்ணொலியும் சேர்ந்தது. அவற்றோடு ஆசிரியரின் தேவாரக்குரல், ஒரு மாமாவின் பஜனைக் குரல், ஒரு மாமியின் வீணைக்குரல் எல்லாம் சேர்ந்து கொண்டன.

அன்று நாவலர் நடந்த நல்லூரின் வீதிகளில் இன்று இந்த திருவெம்பாவை பஜனைக் குழுவினர் பாடிக்கொண்டு வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாடிவீட்டின் யன்னலோடு பூம்பாவை நின்ருள். அந்தவீதியால் அவளோடு படிக்கும் மூன்று பெண்பிள்ளைகள் சந்தனம் பூசப்பட்ட மலர்கள் போல் போய்க்கொண்டிருந்தனர்.

' கலா ! ' என்று அழைத்தாள் பாவை.

கலா, சரோச, ராணி மூவரும் மேலே பார்த்தனர்.

கலா கேட்டாள் : " பாவை நீ ஏன் பஜனைக்கு வாறதில்லை ? '

சரோ சொன்னுள் : " எனக்கு மோனை, திருப்பள்ளியெழுச்சி மனப்பாடம் "

ராணி, தனது சின்னக்கையை விரித்துக்காட்டி " ஹாய் எங்களுக்குப் பிரசாதம் கிடைச்சுது " என்று குதூகலித்தாள்.

பாவைக்கும் மட்டும் பஜனைக் கூட்டத்தோடு சேர்ந்து, 'போற்றியென் வாழ்முத லாகிய பொருளே ' என்று பாடிப் பாடிப் போக விருப்பமில்லையா? அவளுக்கும் பிரசாதம் நாக்கிற்கு இனிக்கும்தானே! அவளுக்குத் திருப்பள்ளியெழுச்சியோடு திருவெம்பாவையும் கரைச்சுக் குடிச்சபாடம்.

பாவை மாடிப்படிகளால் துள்ளி இறங்கி வீட்டு வாசலுக்கு வந்தாள்.

அவள் சொன்னுள் : " கலா! காலையிலே பனியிலே வர அப்பாவும் அம்மாவும் விடமாட்டார்கள் "

" ஏன்? " என்று கேட்டாள் கலா. சரோவும் ராணியும் துக்கப்பட்டனர்.

"காதுகளுக்குள்ளால் பனிபோய்க் காய்ச்சல்வரும்" என்ருள் பாவை.

பாவையின் அப்பா பெரிய டாக்டர், அம்மா சின்ன டாக்டர் ஆகையால் கலா, சரோ, ராணி மூவரும் யோசித்துக் கொண்டு நின்றனர். சிறிது நேர மௌனத்தின்பின் கலா கேட்டாள்,

" தலையைச் சுற்றிக் கம்பளித்துண்டு சுற்றினுல் காதுக்குள்ளால் பனி போகுமா ? "

" மூக்கிற்குள்ளால் போகும் " என்ருள் பாவை.

" மூக்கிற்கும் பஞ்சு அடைஞ்சால் என்ன? " என்று கேட்டாள் சின்ன ராணி.

" அப்ப, எப்படி மூச்சு விடுகிறது? "

" வாயால் விடலாம் "

" அப்ப, பனி வாய்க்குள்ளால் போகும் "

அந்தச் சின்ன மூளைகளுக்கு இது பெரிய பிரச்சினை தான் !

" வாற வெள்ளிக்கிழமை திருவெம்பாவை பாட்டுப்போட்டி, பாவை நீ வருவாயா? " என்று கேட்டாள் கலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பாவை, உனக்குத்தான் முதலாம் பரிசு கிடைக்கும். நீ நன்ருகப் பாடுவாய். வாத்தியாருக்கு உன்னிலே நல்ல விருப்பம் " என்ருள் சரோ.

" எத்தனை மணிக்கு? " என்று கேட்டாள் பாவை.

" பகல் பத்து மணிக்கு " என்று பதில் வந்தது.

" ஓ! வருவேன். பத்துக்குப் பனி இருக்காது " என்ருள் பாவை.

★

வெள்ளிக்கிழமை. பத்துமணி

ஐம்பது அறுபது பிள்ளைகள் வந்திருந்தனர். பாவை வரவில்லை.

திருநாம இராமச்சந்திரன் பாவையின் மாடிவீட்டு நிழலிலே ஒருகுடிசையில் வாழும் ஒரு சிறு பையன். அவனிடம் ஆசிரியர் கேட்டார்.

" சந்திரா, ஏன் பாவை வரவில்லை ? "

" பாவைக்கு 103 காய்ச்சல் என்று அவள் வீட்டு வேலைக்காரி சொன்னுள் " என்று பதிலளித்தான் அவன்.

கலா சந்திரனைக் கேட்டாள்.

" ஏன்சந்திரா, பாவையின் அப்பாவுடைய கார் நம்பரும் 4ஸ்ரீ103 தானே ? "

ராணி கேட்டாள் : " ஏன் கலா, எங்களுக்கு ஒருநேரத்தில் ஒருகாய்ச்சல்தானே வரும். பாவம் பாவைக்கு ஏன் 103 காய்ச்சல் வந்தது."

பாட்டுப் போட்டிக்கு வந்த எல்லாப் பிள்ளைகளுக்குமே சின்னஞ் சிறு பரிசுகள் கிடைத்தன.

அன்று அந்தியில் பாட்டு ஆசிரியர் பாவையின் மாடிவீட்டிற்குச் சென்ருர். பாவைக்குக் காய்ச்சல் 103 டிகிரியிலிருந்து சாதாரண அளவிற்கு வந்துவிட்டது, தடிமன் இருந்தது, மூக்கால் சளிவந்தது, காது களைச்சுற்றி மப்ளர் கட்டியிருந்தாள். அவளுக்குப்பாட்டு ஆசிரியர் வந்தது மிகுந்த சந்தோஷம். அவள் அப்பாவும், அம்மாவும் நோய்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். பெரிய டாக்டர் பாட்டு ஆசிரியருக்கு வந்தனம் தெரிவித்து விட்டுச் சொன்னுர்:

" நோய்களைப் பற்றிஅறிய இன்னும்எவ்வளவோ இருக்கிறது. வீட்டிற்குள் இருந்தாலும் நோய் வருகிறது.. "

ஆசிரியர் யோசித்துக் கொண்டிருந்தார்.

" நோய்களைப் பற்றி யென்ன? நோய், மரணம், பனி, சூருவளி .. இவற்றைப் பற்றியும் விஞ்ஞானம் அறியக் கடலளவு விஷயங்கள் உண்டு. "

அவர் மனத்தில் இன்னும் ஒரு கேள்வி.

" அப்படி அறிந்த பின்பும் ஒருநாளும் ஒருவரும் அறிய முடியாத ஏதோ ஒருபொருள் எப்போதும் இருக்குமோ ? "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவிப் பயன்

" இ. சுந்தரராஜசர்மா "

எண்ணரிய பிறவிகளை நாம் எடுக்கின்றோம். பின்னரும் பிறப்பதனையே தொழிலாகக் கொள்ளுமுகமாக இறக்கின்றோம். வந்தவாறு எங்ஙனம்? போகும் வழி எவ்விதம் என்று சிறிதேனும் நினைத்தோமில்லை. "வந்தவாறு எங்ஙனே போமாறும்'' ஏதோ என்று சிந்தித்தவர் பலர். அவர் வழியைத் தொடர்ந்து செல்கிறோமா என்றால் அதுவுமில்லை. பின் என் செய்கிறோம்? பிறவியை மேலும் வளர்த்துக் கொள்ளுகிறோம். இதற்காகவே வாழ்கின்றோம்.

மனிதன் பிறந்தது முதல் அவனுக்குப்பல நினைவுகள், தொல்லைகள், அன்ன விசாரம் தொட்டு தொலையா விசாரம் வரை நம்மைப்பல விசாரங்கள் பற்றுகின்றன. இந்த விசாரங்களிடையே சிக்கிச் சீரழிந்து போகவேண்டியது தான் நமது வாழ்க்கையா ? என்று நினைப்பவர் சிலர்.

பிறப்பு, இறப்பு ஆகிய நிகழ்ச்சிகள் நம்மத்தியில் தினசரி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றினைப் பார்த்தும்கூட நாம் நமது சிந்தனையை உரிய இடத்தில் செலுத்துவதில்லை.

பிறவிகள் எண்ணற்றவை. பலபிறவிகளை எடுக்கும் ஆன்மா மானிடப்பிறவி யெடுத்தல் பெரும்பேறே.

"அரிது அரிது மானிடர் ஆதல்'' என்கிறார் ஒளவைப் பிராட்டியார். "மானிடப்பிறவிதான் யாதினும் அரிதரிது காண்'' என்கிறார் தாயுமானார்.

இவ்வாறான மானிடப்பிறவியெடுக்க நாம் என்ன தவஞ்செய்தோம். இவ்வாறு மனிதராகப் பிறந்திட்ட நாம் நாம் வந்த நோக்கினை அடைய முயல வேண்டாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறவாமல் பிறவாமல் எனையாள்'' என்று அருணகிரிநாத சுவாமிகள் கேட்டதுபோல நாமும் இறைவனைக் கேட்கவேண்டும். எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்துவிட்ட நாம் உலக வாழ்வின் அநித்தியத்தை உணர்தல் அவசியம்.

'இறைவனடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடலை நீந்துவர்' என்பதனை திருவள்ளுவனார் அழகாகச் சொல்லி வைத்திருக்கின்றார். இறைவனடியை நன்ருகப் பற்றிக் கொள்ள நாம் முயலவேண்டும்.

உலக முழுமுதற் கடவுளாகிய இறைவன் பாதகமலங்கள் இணையற்ற பேரின்பத்தை நமக்குத்தருவன. இறைவன் திரு அடிகளைச் சென்றடைய நாம் நமது வாழ்வினை அமைத்துக்கொள்ளல் வேண்டும். பொய்மையான உலக வாழ்வில் பற்றின்றி உய்யும்வழியைத் தேரவேண்டும்.

இவ்வாறு நாம் உய்யும் வழியைக் காட்டியவர்கள் பலர். அவர்கள் காட்டிய வழியை "அருளமுதம்'' என்னும் ஒளிவிளக்குக் கொண்டு அடுத்தடுத்த இதழ்களில் கண்டு தொடர்ந்து செல்வோம்.

**************************

ஆடம்பர உலக ஆசையிலா அன்பர்களைக்
கூடும் சிவமென்று கூறுகின்ருர் நல்லோரே.

புத்தகத்து ஞானம் புதுமைதான்; என்ருலும்
பக்திவழி எய்தும் பரஞானம் போல்வருமோ.

இன்பம் புறப் பொருளில்லை; இதயத்தில்
அன்பின் வடிவாய் அமைந்திருத்தல் ஒரேமோ

— மணிமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரவிளக்கு

சுவாமியே சரணம் ஐயப்பா; ஹரிஹரசுதனே சரணம் ஐயப்பா; என்ற கோஷம் புரட்டாசி 20உ மேல் ஆரம்பமாகும். ஒரு நாளுக்கு இரண்டு தடவை முகக்ஷவரம் செய்கின்றவராயிருந்தாலும், மலே சென்று திரும்பும் வரை தீக்ஷை (தாடி) வளர்ப்பார்கள். துளசி, ருத்திராக்ஷம் அல்லது ஸ்படிகம்; ஏதாவது ஒரு மாலே அணிந்திருப்பர். நீலமோ, காவியோ, மஞ்சளோ ஏதாவது ஒரு நிறத்தில் ஒரு ஆடை அணிவர். இரவு உணவு கிடையாது. படுக்கையோ, தலையணேயோ, கிடையாது. காலே, உச்சி, மாலே ஆகிய மூ வேளேகளில் எவ் வேளேயாஞலும், சரணம் ஐயப்பா கூறிய பின்பு தான் தண்ணீர் குடிப்பது வழமை. சிலர் 40 நாட்களும், சிலர் 48 நாட்களும் விரதம் அனுஷ்டிப்பர்.

இந்த நாட்களில் பல ஊர்களில் ஒரே மஹரிஷிக் கூட்டமாகவே காட்சியளிக்கும். கோடீஸ்வரரிலிருந்து பிச்சைக்காரர் வரை, பண்டிதரிலிருந்து பாமரர் வரை; கலேஞர்கள், நடிகர்கள் யாபேரும் வித்தியாசம் காண முடியா நிலேயில் கிளம்புவர்.

கார்த்திகை, மார்கழி மாதங்களில் அயல் நாட்டார் ஒருவர் முதல் முதலாகக் கேரளத்திற்குச் சென்ருல் இக் காட்சி அவர் கவனத்தை ஈர்க்கும்.

இவர்கள் தான் சபரிமலே யாத்திரீகர்கள். கொடிய விலங்குகள் உள்ள செங்குத்தான, ஏற்ற இறக்கமுள்ள அடர்ந்த காடுகளின் வழியே! மேற்கு மலேத்தொடரில் ஸ்ரீ ஐயப்பன் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சபரிமலேயை நோக்கி ஆறு லெட்சத்திற்கு மேற்பட்ட யாத்திரீகர்கள் செல்வர். இயற்கையால் வரக்கூடிய அச்சமூட்டும் துன்பங்களேயும், தங்கள் அசையாத நம்பிக்கையால், சகித்துக் கொண்டு செல்லும், இந்த யாத்ரீகர்கள் பாரதத்தின் பல பாகங்களிலிருந்து வருகின்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த யாத்திரையை எல்லோரும் மேற்கொள்ள இயலாது. வழிநடையில் ஏற்படும் கஷ்டங்களை விட கடுமையான தன்னடக்கம் தேவைப்படும். மண்டல பூஜை நோன்புக்கு முன் நாற்பத்தொரு நாட்களும், தைப்பொங்கல் ஆகிய மகர சங்கராந்திக்கு முன் அறுபது நாட்களும் கொண்ட இவ் விரதங்களை அனுஷ்டிக்க வேண்டும். கார்த்திகை முதல் ஜபமாலை அணிந்து, தாடி வளரவிட்டு, விரதம் எடுத்துக் கொள்வர். விரதத்தின் போது பூரண பிரமச்சர்யம் அனுஷ்டிக்க வேண்டும். காம இச்சையை அறவே ஒழித்து, சொந்த மனைவியைத் தாயாகக் கருதும் மனோபாவத்துடன் விரதம் கொள்ள வேண்டும். பத்து வயதுக்கும் ஐம்பது வயதுக்கும் உட்பட்ட பெண்கள் நோன்பில் ஈடுபட முடியாது.

ஒவ்வொருவரும் இரண்டு தேங்காய், அரிசி, பருப்பு, வெல்லம் இரு பகுதியாகத் தைக்கப்பட்ட பை சிறு பைகள் எல்லாம் கொண்டு வருவார்கள். ஒரு கம்பளி, சிறிய விரிப்பு, விரத உடை, ஆகியவற்றுடன், இருமுடி கட்டுமிடம்வந்து விடுவார்கள். இருமுடி என்பது பின்வருமாறு.

தேங்காயின் ஒரு கண்ணைத் துவாரமாக்கி, இளநீரை நன்ருக வடித்துவிட்டு, நல்ல பசும் நெய்யை நிரப்பி, வாயைக் கெட்டியாக மூடிவிடுவர். தேங்காய், அரிசி, பருப்புவகை ஒருபுறம், கற்பூரம், பூஜைத்திரவியங்கள் காணிக்கை ஒருபுறம், இப்படி இருபுறம் கட்டுவதே இருமுடி எனப்படும். இதை சுவாமி சன்னதியில் வைத்துப் பூஜிப்பர்.

இப்பூஜை காண்பவரை மெய்மறக்கச் செய்யும். சத்திரமென்ற இடத்திலிருந்து மலை ஏறுவர், எட்டு மைல் மேடும் பள்ளமுமான, புல்வெளி மலைகளைக், கடக்க வேண்டும். யாத்திரீகர்கள், சிலசமயங்களில் மேகங்களாற் சூழப்படுவர். அடர்த்தியான மஞ்சுதவழ் மலைகள் எட்டும், கடந்து, இரண்டரை மைல் இறங்கினுல், கோயில் தென்படும். அப்போது உணர்ச்சியின் வேகம் கட்டுக்கடங்காது அங்கு இரவு தங்கி அதிகாலை நாலுமணிக்கு கிளம்புவார்கள். இந்த நாற்பது மைலும் நடந்து தான் கடக்க வேண்டும். வேறு வழி கிடையாது நாலு முறை பெரிய மலைகளைக் கடக்க வேண்டும். முக்கியமானது கரிமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

235.5
CAN.
AR.

இதில் ஏறிக் கன்னித் தெய்வமாகக்காக்ஷி யளித்த சக்தி பீட உச்சி கடந்து பம்பை ஆறு வந்து சேருவதற்குள் நம் அன்பின் உறுதி, விரதத்தின் மகிமை ஐய்யப்பனின் அருள் அனைத்துமே அற்புதங்கள் பல நிகழ்த்தும்.

இப்பம்பா தீர்த்தம் தான் ஸ்ரீசபரி, ராமச்சந்திரனுக் காகக் காத்திருந்து, கனிஈந்து, அருள் பெற்ற இடம். இங்கு சிலர் மூன்றுநாள் தங்குவர். சிலர் ஒருநாள் அல் லது இருநாள் தங்குவர்.

தீர்த்தத்தை உண்டு தலையில் தெளித்து, நீலி ஏற் றம் என்ற ஐயப்பன் மலையை, சுமார் மூன்று மைல்கள் ஏறிச் செல்ல வேண்டும் ஒரு சக்தி நம்மை இழுத்துச் செல்வது போன்ற உணர்ச்சி பக்தர்கட்கு ஏற்படும். பதி னெட்டு படிகளோடு கூடிய உயரத்தில் ஐயப்பன் கோயில் அமைந்துளது.

பக்தர்கள் பரவசம் வந்து ஆடத்தொடங்கி விடுவர். ஸ்வாமிசன்னதிமுன் மண்டபம் கடந்து, பிரதக்ஷிணமாக வந்தால், தென்மேற்குப் பகுதியில் விநாயகராலயத்தில் ஹோமம் நடந்து கொண்டிருக்கும். சுற்றிவந்து, இடை வெளியாக சுவாமி சன்னதியில் வந்து நெய்த் தேங் காயினின்றும், நெய்யை எடுத்து ஸ்வாமி சன்னதியில் அபி ஷேகம் செய்யக் கொடுப்பர். பின் சுற்றி வந்து, கணபதி முன் உள்ள ஹோமத்தில் தேங்காயைப் போடுவார்கள்.

தைமுதல் தேதி, அதாவது நமது பொங்கல் திரு நாளன்று, மகர விளக்கு ஏற்றுவார்கள். திருவண்ணா மலைக் கார்த்திகை தீபம் போன்றது. அதே சமயம் எதிர் மலைகளில் பல இடங்களில் ஜோதி தென்படும். ஜாதிமத பேதம் கிடையாது. மிகப் புராதனமான இந்தக் கோயில் கோட்டயத்திலிருந்து எழுபத்தைந்து மைல் தூரம் உள்ளது. ஆயிரத்தி ஐநூறு அடி உயரத்தில் அமைந்திருக் கிறது.

## புராண வரலாறு

ஐயப்பன் சாஸ்தாவின் அவதாரமாகவும், பரசுராம ரால் சபரிமலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டவராகவும் கூறப்படுகிறது. ஸ்ரீ ஐயப்பன் சிவனுக்கும், மோஹினிக்



250350

N.A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் உதித்ததாக புராண வரலாறுண்டு. பஸ்மாசுரன் செய்த கடுந்தவத்திற்கு இரங்கி, சிவபெருமான் அவருக்கு ஒரு வரம் அருளியிருந்தார். அவ்வசுரன் யாருடைய தலையில் கைவைக்கிருனே அவன் சாம்பலாக வேண்டு மென்பதே அவ் வரம்.

தான் பெற்ற வரத்தைச் சிவனிடத்திலேயே சோதிக்க அவன் விரும்பினன். அத் தருணத்தில் மாயன் மோஹினி வடிவெடுத்து, பஸ்மாசுரனை மயக்கி, அவன் தன் தலையி லேயே கைவைத்து அழியும் படி செய்தார். குழந்தை ஐயப்பனை பின்னர் ஓர் அரசன் கண்டெடுத்து தனது மைந்தனுக வளர்த்து வந்தான்.

மற்ருெரு கதையின் படி ஸ்ரீ ஐயப்பன் ஒரு வில்லாளி' வேட்டையாடச் சென்ற பாண்டிய மன்னன் அவரை ஒரு காட்டிலே சந்தித்து அழைத்துச் சென்று காலக்கிரமத்தில் தனதுபடைத்தலைவன் ஆக்கினன்.

இந்த இரு கதைகளிலும் பொதுவான அம்சம் ஐயப் பன் எல்லாத்துறைகளிலும் மேம்பட்டு விளங்கினன், இத னைக் கண்டு அரசவையினர் பொருமை கொண்டு, இரா ணியின் மனதினைக் கலைத்து, கடுமையான வயிற்று நோ யால் வருந்துவது போல் பாசாங்கு செய்யும் படி செய்து, அந்த நோய் தீரப் புலிப்பால் கொண்டுவரும் படி ஐயப்பனை ஏவிவிடத் தூண்டினர். அவர் தமது தெய்வீக சக்தியால் ஒரு புலிக் கூட்டத்தையே கொணர்ந்தார். அரசியும் அரசனும் ஸ்ரீ ஐயப்பனது சக்தியை உணர்ந்து தமது செய்கைக்கு வருந்தினர். தம்மைக் காட்டிலே காண லாம் என்று கூறி ஐயப்பன் அவர்களிடம் விடை பெற் றுச் சென்று வழியில் சந்தித்த பரசுராமரது வேண்டு கோளுக்கு இணங்கி, சபரிமலையைத் தன் வாசஸ்தலமாக் கிக் கொண்டார்.

சபரிமலை ஆலயம் காட்டு யானைகளிலிருந்து ஒரு அக ழியால் காக்கப்பட்டது. தினசரி பூஜைக்கு சாத்தியமில்லை யாதலால் மலையாள ஆண்டின்படி ஒவ்வொரு மாதமும் முதல் ஐந்து நாட்கள் பூஜை நடைபெறும். அத்துடன் மண்டல பூஜைக்கு முன் 41 நாட்களும் தைப் பொங்க லாகிய மகர சங்கராந்திக்கு முன்னும் பின்னும் ஒரு வார மும் திறந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப் பொங்கல் ஆகிய மகர சங்கராந்தியை முன்னிட்டு ஸ்ரீ ஐயப்பனை உளமாரச் சிந்திக்க வாய்ப்பளிக்கும் நோக்கமாக இக் கட்டுரை தொகுக்கப்பட்டது.

ஆசிரியர்

ஓம்

# ஸ்வாமி சரணம் ஐயப்பா.

அன்பர்க்கருள் சுரக்கும் ஐயப்பா சரணம்
ஆபத்தில் வந்துதவும் ஐயப்பா சரணம்
இன்பவழி நடத்தும் ஐயப்பா சரணம்
ஏற்ற மிகுந்தலைவா ஐயப்பா சரணம்

கானகத் துள்வளரும் ஐயப்பா சரணம்
கருணைச் சபரிமலை ஐயப்பா சரணம்
ஞானச் சுடர்பரப்பும் ஐயப்பா சரணம்
ஞானத் திருள்கெடுக்கும் ஐயப்பா சரணம்

அரிஹர புத்திரனே ஐயப்பா சரணம்
அமரர் குலக்கொழுந்தே ஐயப்பா சரணம்
அரியாசனக் குகனே ஐயப்பா சரணம்
அற்புத வித்தகனே ஐயப்பா சரணம்

தொல்லை வினையகற்றும் ஐயப்பா சரணம்
துன்பக் கடல்கடத்தும் ஐயப்பா சரணம்
எல்லையில்லாக் கருணை ஐயப்பா சரணம்
எங்கும் நிறைந்தருளும் ஐயப்பா சரணம்

கலியுக வரதனென்னும் ஐயப்பா சரணம்
கண்கண்ட தெய்வமான ஐயப்பா சரணம்
எளியார்க் கிரங்கிவரும் ஐயப்பா சரணம்
எங்கள் தவப்பயனே ஐயப்பா சரணம்

சித்த மலம்கெடுக்கும் ஐயப்பா சரணம்
செய்தி வினையகற்றும் ஐயப்பா சரணம்
பக்தி விருந்தளிக்கும் ஐயப்பா சரணம்
பரம சுகம்கொடுக்கும் ஐயப்பா சரணம்

பரமஹம்சதாஸன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை.

# ஸ்ரீமத் சுவாமி பிரணவானந்த சரஸ்வதி

**தலைவர், தெய்வீகவாழ்க்கைச் சங்கம் மலாயாக் கிளை,**

**போஷகர், தெய்வீக வாழ்க்கை தலைச் சங்கம்**

**ரிஷிகேசம், இமயமலை.**

## விருத்தப் பா.

அருள் பழுத்த தமிழ் கமழும் யாழ்ப் பாணத்து
அளி நிறைந்த லோசனர் வாழ் அள வெட்டி தன்னில்
தெருள் பழுத்த கிழார் சைவப் பெற்றோர்கட்கு
சேயர் விடாய் தீர்க்க வந்த ஐவர் மூன்றோன்
மருள் பழுத்த மதலைமன அகவைப் போதே
வான் கதிக்கு வழி திறக்கு நெறியை நாடி
இருள் பழுத்த புவி விளக்கு சித்த யோக
முனி சீடன் சீடன்பொன், ஐயன் மாதோ.

இம்மையே எடுத்த யாக்கை இயக்கிடப் பிறரைச் சார்தல்
கண்ணிய மனதிற் கொவ்வாக் கொள்கையால் நாவாயூர்ந்து
செம்மையே கொழிக்கும் சீர்மைத் தேயமாம் மலாயா தன்னில்
மன்னிய ரயில்வே ரப்பர் அகங்களில் பணி புரிந்தாய்
பொய்மையே யறியாத் தீர்க்க தரிசிகளோடும் மேலாம்
புண்ணிய ரிஷி கேசப் புரவலன் சிவானந்த சரஸ்வதி
தம்மையே குருவாய்க் கொண்டு அவன் பணி சிரமேற்பூண்ட
திண்ணியன் சிவானந்தபொன் ஐயனே வருக வாழி!

பூவினில் பிரமச்சரிய துறவினைப் பேறுய்க் கொண்டாய்
மேதவ விவேகானந்த ஆசிரமத் தொண்டு யார்த்தாய்
தேவினிலாக்க வல்ல தெய்வீக வாழ்க்கைச் சங்க
மாகிய பல் வேறுன அருட்பெரும் பணியும் பக்திப்
பாவினில் பணிந்து ஏத்தும் பவனுரை பத்து வெற்பில்
தாபிய சிவ ஆனந்த ஆசிரமச் சேவை மாட்சி
நாவினிற் புகலப் போமோ நற்புனர் சந்நியாசம் பெற்ற
சுவாமிஜி பிரணவ ஆனந்த சரஸ்வதி வாழி வாழி.

மறை தவழ்ரிஷி கேசத்து மாமுனி சிவானந்தர் நின்
இறையுளத் தெளிவு கண்டு ஈந்தனன் காஷாயம் தான்
நிறைபுனர் ஜெனன ஜோதிப் பிரணவானந்த சரஸ்வதி
பிறைமதிப் பெம்மானுசி, பெற்று நீ வாழி நீடு.

தங்கள் அன்பர்கள்,

வரவேற்புக்குழுத் தலைவர்,

மலாயாவாழ் இந்து மக்கள் சார்பாக

கோலாலம்பூர்,
6-12-1964

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் பெருவிழா.

மார்கழித் திங்களின் மதிநிறைந்த வழிபாடுகள். மன்னுபுகழ் தமிழர் வாழுமிடமெங்கணும் மாபெரும் சிறப்புடன் நிகழும். தமிழ் மக்களிடை பொங்கல் பெருவிழா தனிப்பெரும் சிறப்புடன் நிகழ்கின்றது. **பொங்கல்விழா தமிழனின் பெரும் நன்றியறிவிப்பு விழாவாகும்.**

யாருக்கு நன்றியறிவிப்பு விழா?

அனுதினமும் பெரும் ஜோதிச் சுடராக அவனி எங்கும் காட்சியளிக்கும் ஆதித்தனுக்குத்தான்.

எதற்காக இந்த நன்றியறிவிப்பு விழா?

கதிரொளிப் பெருமான் கடல்நீராம் உப்புநீரைக் காய்ந்து, ஆவிநீராக்கித் தூய்மைப் படுத்தி, கார்மேகத்தில் கருக்கொள்ள வைக்கிறான். காற்று உந்த அது குவலயமெங்கும் மழையாகப் பொழிகிறது. அதனால் மன்னுயிரனைத்தும் உய்ய ஒப்பற்ற உதவி செய்கின்றான் கதிரவன். பின்னர் பெய்த பெருமழையால் விளைநிலம் அழுகாமல் பக்குவப்பட்டு விளையுமளவிற்குச் சுடரொளியைப் பரப்பி உதவுகின்றான் செஞ்ஜோதிச் சூரியன்.

மண்ணைத்திருத்தி மக்கள் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். பண்ணை நிலங்களில் பயிராகி வந்த தானியங்களை முதலில் பால் பொங்கவிட்டு நிவேதனம் செய்து, அருட்ஜோதி அண்ணலே ஆதித்தப் பெருமானே, சூரியதேவா, செங்கதிரோனே, உமது ஒப்புயர்வில்லா உயர் கருணையாலே விளைந்து வந்தவைகளை உமக்கு அர்ப்பணம் செய்கின்றோம், எங்கள் இல்லங்களில் தானியங்கள் உமது உதவியால் குவிந்து எமது உள்ளங்களில் ஆனந்தம் பொங்குகிறது இதுமட்டுமா? உமது ஒப்பற்ற ஒளி எங்களின் கண்களில் கலந்துகாணும் ஆற்றலை எமக்கு வழங்கி இருக்கிறீர். கதிரொளியின் துணையின்றேல் காணும் ஆற்றலேது? கைமாறு கருதாத கதிரோனே, கண்ணிற்கு ஒளி யளித்த கண்மணியே, கரம்கூப்பி வணங்குகின்றோம்.

உத்தராயண புண்ணியகாலம், மகாசங்கராந்திப் புனிதநாளில் உதய சூரியனே. பொங்கல் வழிபாட்டின்மூலம் எங்கள் நன்றியைச் செலுத்துகின்றோம். உற்றார் உறவினருடன் உண்டுகளித்துப் புத்தாடை புனைந்து பொங்கும் மங்களத்தை எங்கும் விளங்கச் செய்கின்றனர்.

உழைத்து உதவிய மாட்டிற்கு மறுநாள் விழாக் கொண்டாடி உயக்கின்றனர், தழைத்து விளங்கும் பெரியோர்களை மறுநாள் வணங்கி அவர்களது பேராசிபெறுகின்றனர்.

இங்ஙனம் புறத்தே காணும் பெரும் ஜோதி சொரூபனை கதிரவனை, மக்கள் மகா சங்கராந்தியில் வழிபட்டுய்ய வள்ளலார் இராமலிங்க அடிகளோ இதே தைத்திங்கள் தைப்பூசத் திருநாளில் அகத்தே உறையும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனை வடலூரில் வழிபட்டுய்ய மக்களுக்கு வழிவகை செய்துள்ளார். எல்லாம் வல்ல இறைவன், கதிரொளியில் கலந்து உலகை உய்விப்பது போன்று, ஆன்மாக்களின் உள்ளத்திலும் உயிர்ச் ஜோதியாக நின்று உய்விக்கின்றார்.

**பொங்கும் மங்களம்**
**எங்கும் தங்குக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கண்டேன் கௌரியை"

திக்கெட்டும் புகழ் சொட்டும் திருக்கேதீஸ் வரத்தைத் தரிசிக்க வேண்டுமெனும் ஆவல் கொண்டு சென்ற வருடம் மார்கழியில் மாதோட்டமேவிய மகேஸ்வரனிடம் சென்றோம். செல்லும் பொழுதே எமதுள்ளம் எல்லாம் செம்மைப்பாடுடையது போன்ற உணர்ச்சி மேவச் சென்றோம்.

மாதோட்டத்தின் எல்லை கண்டவுடன் மனம் நெகிழத் தொடங்கியது. நெகிழ்ந்த மனத்துடன் நினைவெல்லாம் கேதீஸ்வரனைப் பரந்துநின்றன. பக்தி கொண்ட உள்ளத்துடன் பாலாவிக் கரையடைந்தோம். பாலாவியின் கரையடைந்தவுடனேயே பாவமெல்லாம் கரைந்தது போன்ற உணர்ச்சி எமக்குண்டானது. பாலாவியிலே பக்தர் சூழாம் பரமனைப்பாடியபடி பனிநீர் ஆடும்காட்சி கண்பெற்ற பலனை எமக்கு எடுத்துக்காட்டியது.

மார்கழி மாதம் கடுங்குளிர். மக்களெல்லாம் குளிருக்காட்பட்ட நேரம். எனினும் மாதேவன் அருட்பட்ட மக்களெல்லாரும் ஆதவன் உதிப்பதற்கு முன்னேயே பாலாவியிலே நீராடுவதில் ஈடுபட்டார்கள். நீராடி முடிந்தபின் கேதீஸ்வர நாதனுக்கு அபிடேகம் செய்வதற்காக அவன்புகழ் பாடிக் கொண்டே நீர்க்குடம் தாங்கிச்சென்ற காட்சிகண் கொள்ளாக் காட்சியாகும்.

சிறியோர் முதல் வயோதிபர் வரை ஒருநிலைப்பட்ட மனதுடன் பாடாத வாயென்ன வாய் என்று கூறுவதுபோல் பக்திப்பாடல்களைப் பாடிக் கொண்டே சென்றார்கள், ஒவ்வொருவராக மகாலிங்கத்துக்கு அபிடேகம் செய்தார்கள். அபிடேகம் எல்லாம் முடிந்தபின் பூசை நடைபெற்றன. திருவெம்பாவை பாடப்பட்டது பூசை வேளையில் அம்பிகைக்கு அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. சந்தனக் காப்பிட்டு சருகை உடை உடுத்து சர்வாங்கமும் தொடும்படியாக மலர் மாலை சூடப்பட்டிருந்தன, இத்தகைய அலங்கார பூஜிதையாக அம்பிகை நேராக எமக்கருள்புரிய வருவது போன்ற உணர்ச்சி எமக்குண்டாயது. உள்ளமெல்லாம் நெகிழ்ந்தது. உவகை பெருக்கெடுத்தது. கள்ளமுள்ள உள்ளத்தைக் கழுவ வரும் அருள் வெள்ளம் போல் இருந்த கௌரியைக் கண்குளிரக் கண்டோம்.

ஆராதனை வேளையில் அருமையான வேதஒலி எம்மை மயக்கியது, குருகுல மாணவர்கள் வேதகோஷம் பொழிந்தனர். அவ்வொலி செவிவழி புகுந்து எமக்கு ஓர் மனஒடுக்கத்தை உண்டாக்கியது. அவ்வேளையிலே தான் செவி பெற்ற பலன் யாதென்று உணரும்படியாக இருந்தது.

வானளாவிய மதில்சூழ்ந்த கேதீஸ்வரத்தில் வானமழைகண்டு களிக்கும் கானமயிலுக்கும் குறைவில்லை. காலைவேளையில் மயிலினங்கள் கூட்டம் கூட்டமாக ஆலய மதில்களிலும், வீதிகளிலும் அலங்காரமாக உலாவித்திரிந்தன. மந்திகள் துள்ளிவிளையாடின. சிந்தையைத் தெளிவிக்கும் சூழல் நிறைந்த திருக்கேதீஸ்வரத்தில் கேதாரேஸ்வரனுக்கு அருகாமையில் அருள் கொழிக்கும் திருமுகம் கொண்ட கௌரியைக் கண்குளிரக் கண்டேன்,

உதவி ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாதம்

## ஆசிரியர் பங்குபற்றிய நிகழ்ச்சிகள்.

டிசம்பர் 9ந் உ இரவு 7-30 மணி வெள்ளவத்தை மாணிக்க விநாயகராலய மஹாகும்பாபிஷேகத்தில் கதாகாலக்ஷேபம்

10ந் உ பிரபல வர்த்தகர், சிவதர்மபாஸ்கர வி. ரி. வி. தெய்வநாயகம்பிள்ளை அவர்களது குமாரன் செல்வன் ஈஸ்வரனது திருமண வைபவத்தில் கலந்துகொள்ளல்.

காலை 10 மணிமுதல் ஷை திருமண வைபத்தில் கதாகாலக்ஷேபம், யாழ்ப்பாணம் திரும்புதல்.

11 உ கந்த கோட்டத்திலிருந்து, அதிகாலை 3-30 மணிக்கு மாணிக்கவாசக ஸ்வாமிகள் திருவுருவப்படத்துடன், தேவாரப் பாடசாலை மாணவ மாணவிகள் சகிதம் திருவெம்பாபஜனை நல்லைக்கந்தன் ஆலயம், நல்லைச் சிவன்கோயில் திருநெல்வேலி சிவன்கோயில் ஆகிய ஸ்தலங்களை வலம்வந்து கந்தகோட்ட மடைதல்.

12ந் உ திருவெம்பாவை பஜனை வழமைபோல்
13ந் உ ,, ,,
14ந் உ ,, ,,

காலை 7 மணி திரு. பொ. சிவசுப்பிரமணியம் அவர்கள் திருமணவைபவத்தில் கலந்துகொள்ளல்,

மாலை 6 மணி நல்லைச் சிவன்கோவில் கடைசிச் சோமவார விழாவில் கதாகால்க்ஷேபம்.

15ந் உ திருவெம்பாவை பஜனை கடைத்தெருவில் மலாயா கபேயில் அதன் சொந்தக்காரர் திரு. கதிரவேலு அவர்களால் வரவேற்பு; பின் வண்ணார்பண்ணை சிவன்கோவில் சென்று கந்தகோட்டம் அடைதல்.

நல்லைக் காவலர் குகஸ்ரீ ஷண்முகதாஸ மாப்பாணர் அவர்கள் அமரராதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை 6-30 மணி சித்தங்கேணியில் திரு. சிவசுப்பிரமணியம். அவர்கள் திருமண வரவேற்பு வைபவத்தில் கதாகாலக்ஷேபம்

16ந் உ நல்லைக்காவலர் அமரரானதை ஒட்டி திருவெம்பாவை பஜனை ரத்து செய்யப்பட்டது.

நல்லைக்காவலர் குகஸ்ரீ ஷண்முகதாஸ மாப்பாண முதலியாரவர்களது இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளல்

17ந் உ திருவெம்பாவை பஜனை வழமைபோல்.

18ந் உ ,, ,, ,,

நல்லைக்காவலர் அமரரானதையொட்டி திருக்கேதீஸ்வரத் திருவாசக விழாவில் கதாகாலக்ஷேபம் ரத்துச் செய்யப்பட்டது.

19ந் உ திருவெம்பாவை பஜனை வழமைபோல்-

இரவு 10 மணிமுதல் காரைநகர் சிவன் மணிவாசகர் விழாவில் கதாகாலக்ஷேபம்.

20ந் உ உதயத்தில் கந்தகோட்டத்தில் ஆத்மார்த்த பூஜா நடராஜ மூர்த்திக்கு விசேஷ அபிஷேகம் ஆர்த்திரா தர்சனம் காலை 4 மணிக்கு திருவெம்பாவை பஜனைக்கோஷ்டி புறப்பட்டு பூர்த்திபண்ணல்.

மாலை 6 மணி வில்லுண்டி விரகத்தி விநாயகராலயத்தில் கதா கலாக்ஷேபம்.

21ந் உ கந்தகோட்டத்தில் தேவார வகுப்பு

22ந் உ கொழும்பு புறப்படல் கடும்புயலில் சிக்குண்டு திருவருளால் வவனியா அடைதல்.

23ந் உ வவனியாவிலிருந்து முருங்கன்வழி கொழும்புசேரல்.
24ந் உ ராமகானசபை விழாவில் கலந்து கொள்ளல்.

27ந் உ ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஸ்வாமி கோயிலில் காலக்ஷேபம்.

28ந் உ கந்தகோட்டத்தில் தேவார வகுப்பு.

29ந் உ ,, ,,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30ந் வ அமரர் குகஸ்ரீ ஷண்முகதாஸ மாப்பாண முதலியாரது அந்தியேஷ்டி வைபவத்தில் பங்குபற்றல்.
மாலை 4 மணி, கந்தகோட்டத்திலிருந்து தேவாரக் கோஷ்டி காவலரில்லத்தை யடைந்து பிரார்த்தனை நடத்தி ஆலயத்தை அடைதல்.

31ந் வ கந்தகோட்டத்தில் தேவார வகுப்பு.

ஜனவரி 1965 1ந் வ புதுவருட விஷேட பூஜை தேவாரக் கோஷ்டி நல்லைக் கந்தன் ஆலயம் போதல்.

2ந் வ கந்தகோட்டத்தில் தேவார வகுப்பு.

4ந் வ ,, ,,

5ந் வ ,, ,,

8ந் வ ,, ,,

9ந் வ ,, ,,

10ந் வ ,, ,,

11ந் வ கொழும்பு புறப்படல்

13ந் வ கொட்டாஞ்சேனை மாரியம்மன் கோவில் ஸ்வர்க்க வாயில் ஏகாதசி விழாவில் கதாகாலக்ஷேபம்.

14ந் வ தைப்பொங்கல் விசேஷபூஜை மாலை ஜிந்துப்பிட்டி திருஞானசம்பந்தர் கானசபைப் பஜனைப் பூர்த்தி விழாவில் கலந்து கொள்ளல்.

**மாசற்ற பொற்கிண்ணம் உள்ளம் அதனில் அருளமுதம்**
**ஈசனெனும் பேர்தாங்கி இன்புறுத்துகின்றதுவே.**

—மணிமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளா பொருளா?

"பாகவதர்"

அறிந்தவரின் ஆபத்தை நீக்கல் • அன்பாம்
அறியாத உயிர்களுக்கு உதவும் அந்தச்
செறிவுடைய அருளறத்தின் செம்மை தன்னை
சீர்பெறவே செப்புகின்றார், செந்நாப் போதர்
அறிவுடைய மக்களினம் அறிய வேண்டி
ஆண்டவனும் அருளுருவே தாங்கி வந்தான்
நெறியுடைய ஞானிகளும் மனத்திற் காணும்
நீண்டதொரு அருளுடைமை எவர்க்கும் வேண்டும்.

பொருளற்ற மக்களையும் பொருளாய்ச் செய்யும்
பொருளன்றி வேறுமொரு பொருளே யில்லை
உருளுடைய தேருக்கு அச்சே போலே
உலகமதில் வாழ்வதற்குப் பொருளும் தேவை
பருவுடலை பேருடலா யாக்கு தற்கும்
பண்பற்ற தீய செயல் புரிவதற்கும்
அருவுருவாம் ஆசைகளை ஆக்கு தற்கும்
அன்பற்ற இன்பத்தைப் பொருளே நல்கும்,

ஈன்றெடுத்த தாயாரை மறக்கச் செய்யும்
ஈடில்லாச் சுற்றத்தை எதிர்க்கச் செய்யும்
ஆன்றகுலப் பெருமைகளை நீக்கச் செய்யும்
அன்புடைய உடன்பிறப்பைப் பகைக்கச் செய்யும்
தான்தோன்றித் தனமாக நடக்கச் செய்யும்
தரித்திரத்தைத் தான்வினவிச் சார வைக்கும்
மான்வைத்த விழியார்மேல் மனதை வைத்து
மதியிழக்கச் செய்வதுவும் பொருளே யாகும்.

ஆனதினால் மானிடரே வாழ்வில் வேண்டும்
அருளுடமை என்ற ஒரு பொருளுடமை
தானதனால் நன்மைபெறத் தருணம் உண்டு
தீயவழி வருகின்ற பொருளை விட்டு
மானமுடன் பொருளீட்டி வாழ வேண்டும்
மாண்புடைய நற்செயலைச் செய்ய வேண்டும்
ஊனமுடன் உலகமதில் வாழ்ந்த போதும்
உள்ளத்தில் உண்மையுடன் வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜிந்துப்பிட்டி
## ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஸ்வாமி கோவில்
# திருஞானசம்பந்தகானசபா மார்கழிபஜனை

கொழும்பு ஜெயந்தி நகர் என்னும் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஸ்வாமி கோவில் பலகாலமாக தக்ஷிணத்தார் மகிமை பரிபாலன சபையாரால் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அங்கு நித்யநைமித்தியங்கள் குறைவிலாது பூஜைகள் நடைபெற்று வருவது ஒரு சிறப்பு.

இவ்வாலயத்தில் அமைந்துள்ளதுதான் " ஸ்ரீ திருஞானசம்பந்தர் கானசபை " இதன் தலைவர் திருமுறை இசைமணி உயர்திரு. கே. வீ. கணபதி அவர்கள்; பல ஆண்டுகளாக விடாது இச்சபையினர் மார்கழி மாதப் பிராதக்கால பஜனையை வெற்றிகரமாக நடாத்திவருவது போற்றத்தக்கது: பல தேவஸ்தானங்கள் இம்மாதிரிப் பஜனையை ஆரம்பித்து இடையே விட்டு விட்டனர். ஆனால் ஷெ சபையினர் எந்தச் சூழ்நிலையிலும் திருவருளே துணை என்று எதுவித இடையூறுமின்றி இற்றைவரை வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர்.

இப்பஜனை வருடந்தோறும் தைப் பொங்கலன்று பூர்த்தியாகும் தைப் பொங்கலன்று மாலை 6 மணிக்கு மகர தோரணம் ஆலவட்டம் முன் செல்ல அடியார் குழாம், கொழும்பு நகர வீதிகளில் தேவாரத் திருமுறைகளை வயலின் கிளாறினட், மிருதங்கம், கஞ்சிரா சகிதம் பாடிச் செல்லும்போது, அக்கோஷ்டியினரைப் பலஇடங்களில் வரவேற்று உபசரிப்பர்; பஜனை நள்ளிரவு 12மணி வரை பூர்த்தியாகும்:

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்."

" திருவருள் "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்

மாசிமக மஹோற்சவத்தில்

# ஆசிரியரது தொடர்ச் சொற்பணி.

2—2—65 முதல் 16—2—65 வரை

தினசரி 6-00 மணிமுதல் 8-00 மணிவரை

## பொருள்

1. தடாதகை திருவவதாரம்
2. எல்லாம் வல்ல சித்தர்
3. விருத்த குமார பாலர்
4. மாறியாடிய மஹாதேவன்
5. பழியஞ்சின பார்த்திபன்
6. பாணருக்கருளிய பரமன் (முதலாம் பாகம்)
7. ,, (இரண்டாம் பாகம்)
8. ,, (மூன்றும் பாகம்)
9. தனபதியாம் தயாபரன்
10. பொன்னனையாள்
11. கண் தந்த திண்ணன்
12. பாலாம்பிகையின் பரிசு
13- ஐம்முகனும் அறுமுகனும்
14. இளமை துறந்த வள்ளல்

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பகுதி

அருட்குழந்தைகளே!

"விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பர்" முதியோர். நமது கந்தகோட்டத்தில் உள்ள திருவருள் தவநெறி மன்றத் தேவாரப் பாடசாலையில் சுமார் எழுபத்தைத்து குழந்தைகள் இன்னிசையோடு, பண்ணிசைக்கப் பயின்று வருகிறார்கள். மார்கழித் திருவெம்பாவையின் போது அத்தனை அருட்செல்வர்களும், செல்விகளும், அதிகாலை மூன்று மணிக்கே கந்தகோட்டத்திற்கு வந்து, பஜனையில் பங்குபற்றி திருவருளுக்கு பாத்திரமானார்கள்: அந்த குழந்தைகளின் பக்தியைப் போற்றுகிறோம்.

அதிகாலையில் குழந்தைகள் எழுந்து படித்தால் பாடம் மனதில் பதியும், இப்பஜனை மூலம் பயின்ற குழந்தைகளைப் போல, இதர குழந்தைகளும், தினமும், வைகறைத்துயில் எழுந்து காலைக் கடன் முடித்து கடவுளைத் தியானித்து, கலாசாலைப் பாடங்களைப் படிக்கவேண்டும்.

உங்கள் உள்ளம் தூய்மையானது அதில் சீக்கிரம் பக்திப்பயிர் விளைய ஏதுவுண்டு.

## நீங்கள் ஜெயம்பெற சில உபதேசம்.

1. அதிகாலையில் எழுந்திரு
2. தந்தை தாயரைப் பணி
3. இஷ்ட தெய்வத்தை வணங்கு
4. உடலை, உடையை, புஸ்தகங்களைப் படிக்கும் இடத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 அதிகாலையில் படி, மாலையில் விளையாடு

6 குருவைக் கடவுளாக மதி

7 பெற்றோர், பெரியோர், குரு, இவர்களிடம் பணிவாக நட

8 எல்லோரிடமும் மரியாதையாக இரு

9 எவரையும் தூஷிக்காதே

10 நல்ல குழந்தைகளுடன் உறவாடு

11 கல்வி முடியும்வரை காலத்தை வீணாக்காதே

12 கடவுளைக் காலையும் மாலையும் வணங்கு

13 நமக்கு எல்லாம் தெரியுமென்றெண்ணாதே

14 வயிற்றுப்பிழைப்புக் கல்வியுடன் சமயக்கல்வியையும் படி

15 விளையாட்டுக்காவது பொய்பேசாதே

16 பிறர்பொருளைப் பதுக்காதே

17 பெரியோரை நமஸ்க்கரி

18 ஆலயப் பிரதக்ஷிணம்செய்

19 அமைதி, பணிவு, பக்தி, ஒழுக்கம் பேணு

20 எல்லோரிடமும் நற்பெயர் வாங்கு

வாழ்க குழந்தைகள் உலகம்!

—மணிபாகவதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் திருநாள்!

பொங்கல் பொங்குக பொருந்துக இன்பமும்
கங்குல் இழிவே கடிதினில் ஓடுக
ஒற்றைத் திகிரி ஒண்கதிர் எழுமாய்க்
கற்றைச் சடையன் கவினுடை மேனிபோல்
கதிரோன் வடக்கே கதுமெனத் திரும்பி
இதமிலாத் தெற்கினின் றிங்கே போந்தனன்
உலகினை ஒளிர்க்கும் உயர்கதி ரோன்போல்
உலகினைப் புரந்திடு ஒருவிலா ஈழமும்
பீடையும் பிணிகளும் பிணக்கும் பூசலும்
வாடையும் ஒடுக; வாய்ந்த நன்மைகள்
வந்தடைந் திடுக வந்தடைந் திடுக
சொந்தநம் நாடிது சேமமாய் வாழுக.
நன்மைக் கறிகுறி நற்பதம் மஞ்சள்
தன்மைக் கறிகுறி தனிப்பாற் பொங்கல்
இன்பவாழ் விற்காய் இனிக்கும் கரும்பு
துன்பம் நீங்கவே துப்புர வதனொடு
உழைப்புக் கலப்பை ஒற்றுமைக் கெருதுகள்
விழிப்பினுக் கறிகுறி விளங்கிடு மகிழ்ச்சி
தன்னல மில்லாத் தியாகம்
பொன்விளை பூமியே பொருந்தப் பார்ப்பமே.



—அமுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைமாதம் பிறந்தது முதல் ஆக்கவேலைகள் பலதொடங்கும்; வருடத்தேவைக்கான நெல் அறுவடையாகும் காலம்; பயறு, உழுந்து, முதலிய வருடத்தேவைப் பொருட்களும், கரும்பு, மஞ்சள், இஞ்சி முதலிய உப பொருட்களும் கிடைப்பது தை பிறந்துதான், பொருளாதார நிலைநன் நிலையிலிருப்பதும், வியாபாரிகள் தங்கள் வியாபாரப் பெருக்கத்தை எதிர்பார்ப்பதும், தைமாதத்திற்குப் பிறகுதான். தை பிறந்தவுடன்தான் தேவாலயங்களில் விழாக்கள் தொடங்குகின்றன; மக்கள் தங்கள் தேவைப்பொருள்களை சேமித்து வைத்துக்கொண்டு மகிழ்ச்சியுடன், விழாக்களில் கலந்து கொள்கின்றார்கள். மா, பலா, வாழை முதலிய கனிவர்க்கங்கள் நல்ல பயனைத் தருவது தை மாதத்திற்குப் பிறகுதான்; கல்விகற்கும் மாணவனும் தான் கற்ற கல்வியில் முடிவாம் தேர்வினையும், அரசியல் அதிகாரிகள் தங்கள் கடமைகளின் முடிவு காலத்தினையும், எதிர்நோக்குவர். தைமாதத்திற்குப் பிறகுதான், உலகத்தார்க்கு அச்சாணி எனப்படும் உழவனும், தன்னுடைய கடமைகள், பெரும் அளவில் முடியும் தைமாதத்தினையே எதிர்நோக்குகிறான். இத்தகைய தையின் சிறப்பினை உன்னியே, பண்டையோர் ''தைபிறந்தால் வழிபிறக்கும்'' எனக்கூறினர் ஆகவே தை பிறந்துவிட்டது, நம்எல்லோருக்கும் இனி வழிபிறந்து விட்டது. சமூக, சமய, அரசியல் ஆகிய எத்துறையில் உள்ளவர்க்கும் நல்ல வழி பிறக்க நல்லைக்கந்தன் திருவடியை வழுத்துகின்றோம்.

அன்பு பொங்க! அறம் பொங்க!
இன்பம் பொங்க! இதயம் பொங்க!
அருள் பொங்க! அமுதம் பொங்க!
பொங்கலோ பொங்கல்!

சுபம்.

**அருளமுத ஆதரவாளர்கட்கும்; அருள் வள்ளல்கட்கும்; அபிமானிகட்கும் எங்கள் அன்புகலந்த பொங்கல் வாழ்த்துக்கள்.**

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் மக்கள் தங்கள் தேவைப்பொருள்களை தயார்செய்து கொள்ளவும் முடியாத காலமாக இக்காலம் காட்சியளிக்கும்.

அன்றியும் மக்களது தேவைப் பொருள்களாகிய நெல், கோதுமை, காய்கறி, கிழங்குவகைகள், யாவையும், இக்காலத்தில் பயனைத்தராது தை மாதம் தொடங்கும் உத்தராயணத்திலேயே பயன்தரும். அன்றியும் மணவிழாக்கள் காரணமாக ஒருவருடன் ஒருவர் பேச்சு நடத்த சேய்மைக்கண் உள்ள இடங்கட்குச் செல்வதற்கும் மேற்கூறப்பட்ட மழைக்காலமும், பனிக்காலமும், தடையாக இருக்கும். எனவே சூரியனின் தரிசனத்தைப் பெறுது, மன ஒடுக்கத்தினையும், மெய்யொடுக்கத்தினையும், தந்த இக்காலத்தை மக்கள் வெறுத்தனர். தங்களுக்கு நல்வாழ்வும் இன்பமும் பயக்கும், உத்தராயணத்தையே மக்கள் விரும்பினர். எனவே மக்களின் மனம், அக்காலம், பிறத்தற்கேதுவாய தை மாதத்தை நாடிநின்றது. எனவே ஒவ்வொருவரும், தை மாதத்தின் மேல் பழிசுமத்தி; ''தை **பிறந்தால் வழி பிறக்கும்**'' எனக்கருதி வாளா விருந்தனர்.

அவ்வாறு அவர்கள் கருதியதன் காரணத்தை ஆராய்வோம்.

## தைமாதச் சிறப்பு.

தைமாதம் பிறந்தாலே மக்கள் உடலிலும், உள்ளத்திலும், ஒருவித மகிழ்ச்சி இருப்பதை உணரலாம். தை மாதத்தின் தலைநாளன்று தமிழர்களின் தலைசிறந்த திருநாளாகும், அன்று வீடுகளைப் புதுக்குவித்து, சாந்துபூசி, பலவித அலங்காரங்களைச் செய்து, அழகுறவிளங்கச் செய்வார்கள் சலிப்படைந்திருந்த மக்கள் மனம் புதுமையை நாடியதில் வியப்பென்ன? எங்கும் புதுமை உணவு சமைக்க, புதுநெல் இட்டு ஆக்கவோ, புதுக்கலங்கள்; மக்கள் அணியும் ஆடைகள் புத்தாடைகள்: இனிய சர்க்கரைப்பொங்கல் ஆக்குவதற்கும், புதுவெல்லம் சர்க்கரை முதலியன; தங்களைப்பிரிந்து, துயரக்கடலில் ஆழ்த்திய கதிரவனைநோக்கி, எங்களுக்கு நல்வாழ்வு அளிக்கவேண்டும் என வேண்டிப் பலவித பொருட்களையும், படைப்பர். மறுநாள் கோபூஜையன்று, தமிழ்நாட்டுச் செல்வங்களாகிய பசுக்களைப் பூசித்து, பலவித நிறங்களாலும், அழகுற விளங்கச்செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை பிறந்தால் வழிபிறக்கும்

தை மாதம் பிறக்கப் போகிறது; தை மாதம் பிறந்து விட்டது, என்றுலே மக்களுக்கு மகிழ்ச்சிதான். பாராளும் மன்னன் முதல், பத்துவயதுச் சிறுவன் வரை, யாவரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்துவது தைமாதம்.

ஆண்டினைப் பன்னிரண்டு திங்களாகப் பிரித்து வகுத்தனர் பண்டையோர்; சித்திரைமுதல் பங்குனி ஈருக பகுக்கப்பட்ட பன்னிரண்டு மாதமும், அறுவகைப்பெரும் பொழுதுகளாகப் பிரிக்கப்பட்டன. அவை, கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், வேனிற்காலம். என்பவை ஆவணி தொடங்கி, ஆடி ஈருக, அறுவகைப்பட்ட காலமும் இரண்டிரண்டு திங்களாகப் ப்குக்கப்படும்.

## தக்ஷிணுயனம்

உலகம் உவப்பத்தோன்றி, இருளகற்றி, ஒளிபரப்பும், பல்கதிர் ஞாயிற்றின் செலவினை நோக்குவாம்; தைமாதம் முதல் ஆனி மாதம் வரை உலகத்தின் வடபாகத்திலும், ஆடிமாதம் முதல் மார்கழி வரை தென்பாகத்திலும் கதிரவன் சஞ்சரிக்கின்றுன்; இதையே வானநூலார் உத்தராயணம், தக்ஷிணுயினம் என இருவகையாகக் கூறுபோடுவர். சூரியன் தக்ஷிணுயனத்தில் சஞ்சரிக்கும் காலமெல்லாம் பெரும்பாலும் மழைக்காலமும், பனிக்காலமும் ஆகும்; எனவே சூரியனது கிரணங்களால் ஆயபலனை அதிக அளவில் பெறமுடியாத காலமாகும். இக்காலத்தில் பகலும் இரவும், நுண்துளி சிதறி இடைவிடாது மழைபெய்வதால் மக்கள் இன்ப வாழ்வு நடத்த இக்காலம் இடையூருக இருக்கும். மக்களுக்கு மனமகிழ்ச்சிதரும் படியான மணவிழாக்கள், கோவில் விழாக்கள், ஆடல் பாடல்கள் நிகழ்த்த இக்காலம் ஏற்றதல்ல, எனவே இக்காலத்தில் மாந்தர்கள் நடமாட்டம் ஒய்ந்து, வீட்டின் கண்ணே தங்கி இருப்பர். சூரியனின் ஒளியைச் செவ்வனே பெறமுடியாத காரணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

உ

முருகா

வெற்றி பெறுக...!

## "அருளமுதம்"

என்னும் சிறந்த ஆத்மீகசஞ்சிகையைக் கண்டு மகிழ்வுற்றேன்.

வித்துவ சிரோன்மணி ஸ்ரீ கணேசையர் அவர்களின் வழித் தோன்றலும், பிரம்ம ஸ்ரீ சங்கர சுப்பையர் அவர்களின் சிஷ்யருமான, முத்தமிழ்மணி ஸ்ரீ சி. எஸ் எஸ். மணிபாகவதர் அவர்கள், தாம் இதுவரை தீந்தமிழில் இன்னிசையுடன் சொல்லால் ஆற்றிய பணியை; இனிப் பேனு முனையாலும் செய்ய முன்வந்துள்ளமை பெரிதும் பாராட்டுதற்குரியது.

அன்பும் பண்பும் நிறைந்து அவர்கள் மேற்கொண்டுள்ள இச்சீரிய தொண்டு, எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் வெற்றி பெறுக.

சுவாமி பிரணவானந்த சரஸ்வதி
*தலைவர்*: தெய்வீக வாழ்க்கைச் சங்கம்.
கோலாலம்பூர், மலேசியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொங்கல் மலர்

அருள் 1 | தை 1965 | அமுதம் 3

## அமுதத்தில்


| மலர். | | இதழ். |
|---|---|---|
| 1 | ஆசியுரை | 2 |
| 2 | தைபிறந்தால் வழிபிறக்கும் | 3 |
| 3 | பொங்கல் திருநாள் | 6 |
| 4 | அந்தநாள் இனிவருமோ | 7 |
| 5 | சமயமும் பெண்களும் | 10 |
| 6 | மகோத்சவம் | 14 |
| 7 | அருளமுத வள்ளல்கள் | 19 |
| 8 | பனியும் பாவையும் | 20 |
| 9 | பிறவிப்பயன் | 23 |
| 10 | மகரவிளக்கு | 25 |
| 11 | ஸ்வாமி சரணம் ஐயப்பா | 29 |
| 12 | விருத்தப்பா | 30 |
| 13 | பொங்கல் பெருவிழா | 31 |
| 14 | கண்டேன் கௌரியை | 32 |
| 15 | இம்மாதம் ஆசிரியர் | 33 |
| 16 | அருளா பொருளா | 36 |
| 17 | மார்கழி பஜனை | 37 |
| 18 | சொற்பணி | 38 |
| 19 | பாலர் பகுதி | 39 |


250350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org